<u>குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவையாறு.</u>

<u>CC. No. 142/2016</u>

<u>M.P.No.1/2025</u>

2025–ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 11–ம் நாள் செவ்வாய்கிழமை நீதிமன்ற தரப்பு சாட்சி–1(CW–1)**–ன் வாக்குமூலம்** (1969–ம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திருமதி.R.ரஷ்யா **இளநிலை உதவியாளர்** அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | **சத்தியபாமா** | தொழில் | : | **காவல் ஆய்வாளர்** |
| க/பெ. | : | **நடராஜன்** | **ஊர்** | : | **திருவையாறு** |
| வயது | : | 41 | மாவட்டம் | : | **தஞ்சாவூர்** |

<u>**11.08.2025**</u>

<u>**எதிரி ஆஜர் இல்லை.**</u>

**முதல் விசாரணை:**

நான் திருவையாறு அனைத்து மகளீர் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிகிறேன். திருவையாறு அனைத்து மகளீர் காவல் நிலைய குற்ற எண்.6/2013 U/s 417. 493, வழக்கின் எதிரி சிவக்குமார் த/பெ வெள்ளைச்சாமி, கீழத்தெரு, எண்.23 பழைய ஆற்காடு, பூதலூர் தாலுக்கா, தஞ்சாவூர் மாவட்டம் என்பவறுக்கு எதிராக பிறப்பிக்கப்பட்ட பிடி கட்டளையை பல்வேறு முயற்ச்சி எடுத்தும் நிறைவேற்ற முடியவில்லை. எனவே அவரை தேடப்படும் குற்றவாலியாக அறிவிக்க கோரி நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்து. நீதிமன்ற உத்தரவின் பேரில், மேற்படி எதிரியை பொறுத்த தேடப்படும் குற்றவாளிக்கான அறிவிப்பை தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகம், பூதலூர் வட்டாச்சியர் அலுவலகம், பழைய ஆற்காடு கிராம அலுகலகம், பூதலூர் BDO அலுவலகம், திருக்காட்டுப்பள்ளி காவல் நிலையம், திருவையாறு அனைத்து மகளிர் காவல் நிலையம், பழைய ஆற்காடு பேரூந்து நிலையம், எதிரியின் வீடு ஆகிய இடங்களில் ஒட்டி சார்பு செய்யப்பட்டது. 10.08.2025 ஆம் தேதி இது குறித்து தினசரி நாளிதழில் விளம்பரமும் கொடுக்கப்பட்டது. **(தேடப்படும் குற்றவாளிக்கான அறிவிப்பு, நீ.ம.சா.ஆ 1 ஆகவும் அறிவிப்பு ஒட்டப்பட்டதற்கான புகைப்படங்கள் 8 எண்ணிக்கை, நீ.ம.சா.ஆ.2 வரிசையாகவும், தினசரி நாளிதழ் விளம்பரம் நீ.ம.சா.ஆ.3 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.).** எதிரி இந்த வழக்கிற்காக தலைமறைவாக இருப்பதால் பிரகடணம் படுத்தப்பட்ட குற்றவாளியாக அறிவிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

<u>**மறு விசாரணை**</u> இல்ல

திறந்த நீதிமன்றத்தில் எதிரிகள் முன்னிலையில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் சொல்லப்பட்டு உடனுக்குடன் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு சாட்சியால் சரியாக உள்ளது என ஒப்புக்கொள்ளப்பட்டது.

ஒம்./–எஸ்.ஆக்னஸ் ஜெப கிருபா,
நீதித்துறை நடுவர்,
திருவையாறு.

<u>குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவையாறு.</u>

<u>CC. No. 142/2016</u>

<u>M.P.No.1/2025</u>

2025–ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 11–ம் நாள் செவ்வாய்க்கிழமை நீதிமன்ற தரப்பு சாட்சி–2(CW–2)**–ன் வாக்குமூலம்** (1969–ம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திருமதி.R.ரஷ்யா **இளநிலை உதவியாளர்** அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | **சக்திவேல்** | தொழில் | : | **அலுவலக உதவியாளர்** |
| க/பெ. | : | **மணி** | ஊர் | : | **திருவையாறு** |
| வயது | : | 29 | மாவட்டம் | : | **தஞ்சாவூர்** |

**<u>11.08.2025</u>**

**<u>எதிரி ஆஜர் இல்லை.</u>**

**முதல் விசாரணை:**

நான் இந்நீதிமன்றத்தில் அலுவலக உதிவியாளராக பணிபுரிகிறேன். இன்று திறந்த நீதிமன்றத்தில் இந்த வழக்கின் எதிரி சுரேஷ்குமார் த/பெ ரெங்கராஜ் என்பரை மூன்று முறை அழைத்தும் அவர் நீதிமன்றத்தில் ஆஜர் ஆகவில்லை.

<u>**மறுவிசாரணை –** இல்லை.</u>

திறந்த நீதிமன்றத்தில் எதிரிகள் முன்னிலையில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் சொல்லப்பட்டு உடனுக்குடன் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு சாட்சியால் சரியாக உள்ளது என ஒப்புக்கொள்ளப்பட்டது.

ஒம்./–எஸ்.ஆக்னஸ் ஜெப கிருபா,
நீதித்துறை நடுவர்,
திருவையாறு.